**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் வெள்ளிகிழமை

(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 27 ஆம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 132/2025**

**CNR.No.TNTI17-000796-2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>உடுமலைப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண்.94/2025 |
| | //எதிர்// | |
| எதிரி | – | சுப்ரமணியன் (எ) திவான் (22/2025),<br>த/பெ. நடராஜன்,<br>559/18th Block, கல்லுக்குழி, கீரணத்தம்,<br>கோயம்புத்தூர்.<br>தற்போதைய முகவரி<br>2 வது வீதி, அண்ணா நகர், செட்டிப்பாளையம்,<br>கோயம்புத்தூர். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 331(4), 305(a) BNS –ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 331(4), 305(a) BNS –ன் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக எதிரி மீது வனையப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 331(4)–ன் கீழன குற்றத்திற்கு குறைந்தபட்ச தண்டனையாக ஒரு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 305(a)–ன் கீழன குற்றத்திற்கு குறைந்தபட்ச தண்டனையாக ஒரு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும், எதிரி வேறு வழக்கில் சிறையில் இருப்பதால் அபராதம் விதிக்கப்படாமலும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 271(2)–கீழ் தீர்ப்பு வழங்கப்படுகிறது. மேற்படி தண்டனை காலத்தை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | | மேலும் CC No.130/2025, CC No.131/2025, CC No.323/2025, CC No.324/2025, CC No.325/2025, CC No.326/2025 ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட தண்டனைக் காலத்தினையும் ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 468–ன் கீழ் இவ்வழக்கின் எதிரியானவர் 10.04.2025 ஆம் தேதி முதல் 07.01.2026 வரை (273 நாட்கள்) சிறையில் இருந்த காலத்தினை தண்டனைக் காலத்தில் கழித்துக் கொள்ளவும் இந்நீதிமன்றம் உத்திரவிடுகிறது. |
| புகார் நாள் | – | 17.02.2025 |
| கைது செய்யப்பட்ட நாள் | – | 10.04.2025 |
| பிணையில் சென்ற நாள் | – | 07.01.2026 |
| கோப்பு நாள் | – | 27.05.2025 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 14.07.2025 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 25.03.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 10.04.2026 |

இவ்வழக்கானது 27.05.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.V.சுரேஷ் ராஜேந்திரன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்தளிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற எண்.94/2025 ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :

1) வாதியானவர் கடந்த 16.02.2025 ஆம் தேதி மாலை 07.00 மணிக்கு வீட்டை பூட்டிவிட்டு சமையல் ஆர்டரின் பேரில் ஜல்லிப்பட்டி கேட்டரிங் சென்டருக்கு தனது மனைவியுடன் சென்றிருந்த சமயத்தில் எதிரி திவான் என்கிற சுப்ரமணியன் என்பவர் வீடுகளின் பூட்டை உடைத்து திருடி அதன் மூலம் செல்வத்தை சேர்த்து தனது திருமணத்தை நடத்திக் கொள்ளலாம் என்றும், அவரது சுயலாபத்திற்காக திருட வேண்டும் என்ற நோக்கத்துடன் பூட்டியிருந்த வாதியின் வீட்டின் காம்பவுண்ட்டை கடந்த 17.02.2025 ஆம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு ஏறி குதித்து வீட்டின் முன் கதவை எதிரி வைத்திருந்த இரும்பு ராடால் கதவை நெம்பி பூட்டை உடைத்து அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து பெட்ரூமில் இருந்த இரும்பு பீரோவின் மேல் பகுதியில் இருநத சாவியை எடுத்து பீரோவை திறந்து துணிகளை கலைத்துப் போட்டு தேடி இரும்பு பீரோவின் லாக்கரில் இருந்த சுமார் 3 பவுன் தங்க நெக்லஸ் ஒன்று, சுமார் ½ பவுன் தங்க காயின் ஒன்று, தாலி குண்டு-2 எண்ணிக்கை, தாலி காசு-2 எண்ணிக்கை என சுமார் 1 பவுன், ¼ பவுனில் மூக்குத்தி மூன்று, என மொத்தம் சுமார் 4 ¾ பவுன் தங்க நகைகளையும், அதே லாக்கரில் இருந்த பணம் ரூ.40,000/-யும் இரவில் திருடியும், திருடிய பணத்தை எதிரி வாளயார் சேவல் சண்டையில் பந்தயம் கட்டி விளையாடி வாதிக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியும், வாதிக்கு இழப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காகவும், எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் ஆய்வாளர் பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவுகள் 331(4), 305(a)-ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில்

முன்னிலையான போது எதிரிக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரி மீது பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 2023, பிரிவுகள் 331(4), 305(a)–ன் கீழான குற்றத்திற்கான முதல் நோக்கு முகாந்தரம் இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றதால் பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 2023, பிரிவு 263–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் படித்துக்காட்டி விளக்கம் கேட்டபோது இவ்வழக்கின் எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து தான் குற்றவாளி அல்ல என தெரிவித்தார். மேலும் தன் மீது போடப்பட்ட வழக்கை விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய அரசு தரப்பில் வழிவகை செய்யப்பட்டது.

3) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 11 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு 06 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.5 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்</u>:**

4) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 மணி என்பவர் உடுமலை எலையமுத்தூர் பிரிவில் வசித்து வருகிறார். கடந்த 16.02.2025ம் தேதி 3.30 மணிக்கு ஜல்லிப்பட்டிக்கு கேட்டரிங்க சென்டருக்கு மனைவியுடன் வீட்டை பூட்டிவிட்டு சென்றுவிட்டு கடந்த 17.02.2025ம் தேதி மதியம் 3.30 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்தபோது, முன்பக்கமாக வடக்கு பார்த்த கேட்டை திறந்து பார்த்த போது வீட்டின் மெயின் டோர் மற்றும் கைப்பிடி உடைக்கப்பட்டு, உள்ளே சென்று முதலில் பெட்ரும் சென்று பார்த்துள்ளார். ஸ்டில் பீரோ –1, மர பீரோ –1 திறந்தும் துணிகள் கலைந்தும் இருந்துள்ளது. பின்னர் பார்த்த போது இரும்பு பீரோவில் 3 பவுன் நெக்லஸ்– 1, ½ பவுன் காயின்–1, தாலி காசு–2, தாலி குண்டு–2,

மூக்குத்தி 3 எண்ணிக்கை, ¼ பவுன் இருந்தது மொத்தமாக 4 ¾ பவுன் தங்க நகையும் பணம் ரூ.40,000/− காணவில்லை. உடனே காவல் நிலையம் சென்று அ.சா.1ம், அவரது மனைவியும் புகார் கொடுத்துள்ளார். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) பின்னர் களவு போன நகை 4 ¾ பவுன் நகையை நீதிமன்றத்தின் மூலமாக மனு தாக்கல் செய்து பெற்று கொண்டார். தங்க நெக்லஸ்−1 அ.சா.பொ.1 என்றும், ½ பவுன் காயின் −1 அ.சா.பொ.2 என்றும், தாலி காசு −2 எண்ணிக்கை அசா.பொ.3 என்றும், தாலி குண்டு − 2 எண்ணிக்கை அ.சா.பொ.4 என்றும், மூக்குத்தி 3 எண்ணிக்கை அ.சா.பொ.5 என்றும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) அ.சா.2 குமுதவள்ளி என்பவர் உடுமலை எலையமுத்துார் பிரிவு ஆர்ட்ஸ் காலேஜ் ரோட்டில் வசித்து வருகிறார். கடந்த 16.02.2025ம் தேதி 7.00 மணிக்கு அ.சா.2ம் அவரது கணவரும் ஜல்லிபட்டி கேட்டரிங் வேலைக்காக வேலை செய்து வந்த பின்னர் 17.02.2025ம் தேதி 3.30 மணிக்கு அவர்கள் வீட்டிற்கு வந்தபோது, கேட்டின் பூட்டை திறந்து விட்டிற்குள் சென்றபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டும், வீட்டின் தென் மேற்கு மூலையில் உள்ள பெட்ரூம் சென்று பார்த்த போது பெட்ரூமில் ஒரு மர பீரோ ஸ்டில்பீரோ திறந்திருந்துள்ளது. பீரோ சாவி பீரோவின் மேல் வைத்திருந்த சாவியை எடுத்து பீரோவை திறந்துள்ளனர். இரும்பு பீரோவில் இருந்த நெக்லஸ் 3 பவுன், ½ பவுன் தங்க காயின்−1 தாலி காசு −2 தாலி குண்டு− 2, மூக்குத்தி 3 எண்ணிக்கை ¼ பவுன் மொத்தம் 4 ¾ பவுன் நகையும் பணம் ரூ.40,000/− பணமும் திருடு போயிருந்துள்ளது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள்.

7) மேலும், 1 ½ மாதம் கழித்து போலிசார் கண்டுபிடித்து கொடுத்துள்ளனர். யார் திருடினார்கள் என்ற விவரத்தை தெரிந்து கொள்ளவில்லை. கணவரும் மருமகனும் வந்து மேற்படி சொத்துக்களை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டுள்ளார்கள்.

8) அ.சா.3 சின்னதுரை என்பவர் உடுமலைப்பேட்டை எலையமுத்தூர் பிரிவில் TMS லேஅவுட்டில் வசித்து வருகிறார். கடந்த 17.02.2025ம் தேதி பணியில் இருந்து வீட்டிற்கு வந்த போது அசா.1 மணியின் வீட்டில் திருடு போயிருந்தது, அங்கு போலிசார் நின்று கொண்டிருந்தார்கள், அங்கு DSP இருந்தார், SI ரேங்கில் விசாரித்து கொண்டிருந்தார் என்றும் கூறியுள்ளார். SI மேப் மற்றும் வரைபடம் வரைந்து இடங்களை பற்றி கேட்டதற்கு, அருகில் இருந்தவருக்கு சொல்ல தெரியவில்லை. அ.சா.3 தான் அருகில் உள்ள வீடு விவரங்களை பக்கத்தில் உள்ள தோப்பின் விவரங்களை சொல்லியுள்ளார். போலிசார் அதை குறித்து தனியாக 1 ½ பக்கம் அளவில் எழுதி கையொப்பம் பெற்று கொண்டார்கள். விவரங்களை தெரிந்து கொண்டு கையொப்பம் செய்துள்ளார்.

9) அ.சா.4 கார்த்திக் என்பவர் உடுமலைப்பேட்டை சங்கர் நகரில் வசித்து வருகிறார். கடந்த 10.04.2025ம் தேதி அ.சா.4ம், அவரது நண்பர் முகமது சபிர் என்பவரும் வந்து கொண்டிருந்த போது போலிசார் அயலு மீனாட்சி நகர் பஸ்ஸ்டாப் அருகில் சோதனை செய்து கொண்டிருந்த போது, ஒருவரது பைக்கில் ஒரு இரும்பு ராடு இருந்ததால் அந்த நபரை எங்கிருந்து வருகிறிர்கள் என்ன என்று அ.சா.4ன் முன்னிலையில் விசாரித்துள்ளார்கள். போலிசார் அ.சா.4 மற்றும் அவரது நண்பர் இருவரிடமும் மேற்படி நபரை விசாரிப்பதாகவும், அதற்கு சாட்சியாக இருக்க கேட்டதற்கு, அ.சா.4ன் பகுதியில் தொடர்ந்து திருட்டு நடப்பதால் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு உதவியாக சாட்சியாக இருப்பதாக சொல்லியுள்ளார்.

10) அதன்பிறகு போலிசார் விசாரணை மேற்கொண்டபோது, அவர் பெயர் திவான் (எ) சுப்பிரமணியன் என்றும், கோயம்புத்தூர் செட்டிபாளையத்தை சேர்நதவர் என்றும் சொல்லியுள்ளார். உடுமலைப்பேட்டையில் மின் நகர், அண்ணாமலையார் நகர், UKP அக்சயா கார்டன், TMS லே அவுட், கணபதி

பாளையம், வெற்றி அவென்யு, பிரபு நகர், இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் ஆளில்லா வீட்டில் வீடு புகுந்து திருடியதாக குற்றத்தை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்தார் என்றும், பின்னர் போலிசார் அவர் சொன்ன வாக்குமூலத்தை லேப்டாப்பில பதிவு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து வந்து தங்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், 8 பக்கம் கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனைத்து பக்கத்திலும் திவான் (எ) சுப்பிரமணி என்பவர் கையொப்பம் செய்தார் என்றும், தாங்கள் கடைசி பக்கத்தில் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் கூறியுள்ளார். பின்னர் பிளாட்டினா இரு சக்கர வாகனம் இரும்பு ராடை கைப்பற்றியதற்காக கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் கேட்டதற்கு சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள்.

11) பின்னர், 8 வீடுகளில்

(1). மின்நகரில் 1 பவுன் தங்க காயின்–1, ¼ பவுன் தங்க மோதிரம் –1,

(2). அண்ணாமலையார் நகரில் ½ பவுன் தங்க காயின்–2, ¾ பவுன் தங்க தோடு–1, 1 பவுன் தங்க மோதிரம் –1,

(3). UKP அக்சயா கார்டனில் 2 பவுன் தங்க வளையல் –2, 1 ¼ பவுன் தங்க வளையல் –1, 1 பவுன் தங்க பிரேஸ்லேட் –1, ¼ பவுன் தங்க தோடு–1, 2 பவுன் தங்க தோடு –2 ஜோடி.

(4). TMS லே அவுட்டில் 3 பவுன் தங்க நெக்லஸ்–1, ½ பவுன் தங்க காயின்–1, தங்க தாலிகுண்டு –2 தங்க தாலி காசு இரண்டும் சேர்ந்து 1 பவுன், தங்க மூக்குத்தி –3 ¼ பவுன் உடையது.

(5). கணபதிபாளையத்தில் 2 பவுன் தங்க செயின் –2, 1 ½ பவுன் தங்க மோதிரம் –2, 1 பவுன் தங்க தோடு –1, வெள்ளி குத்து விளக்கு –1, வெள்ளி விநாயகர் –1.

(6). பிரபு நகரில் வெள்ளி கொலுசு –2 ஜோடி, குழந்தை வெள்ளி கொலுசு – 2 ஜோடி, வெள்ளி குங்குமச்சிமிழ்–1, வெள்ளி சந்தனக்கிண்ணம்–1, வெள்ளி

பவுல்–1, வெள்ளி ஸ்பூன்–1

(7). இந்திரா நகரில் 3 பவுன் தங்க செயின்–1 குழந்தை தங்க செயின் 2 பவுன் –2, தங்கதோடு 4 ஜோடி, வளையல் –1 ஜோடி 3 ½ பவுன், கொக்கியில்லாத தாலி கொடி 4 ¼ பவுன்–1,

(8). வெற்றி அவென்யு ¼ தங்கதோடு –2, ½ பவுன் தங்க மோதிரம் –2, ரொக்கம் ரூபாய் 10000/–.

என மேற்படி பொருட்களை செட்டி பாளையம் தனது வீட்டில் வைத்திருப்பதாக அவர் போலிசாரிடம் சொன்னார் என்றும், உடனே போலிசார் அழைத்து சென்றதன் பேரில் ஆஜர்படுத்துவதாக கூறியதால் போலிசார் தங்களையும் அழைத்து கொண்டு கோயம்புத்தூர் செட்டிபாளையததில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று திவான் (எ) சுப்பிரமணியன் என்பவர் அவரது வீட்டின் செல்பில் இருந்து நகைகளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், வெற்றி அவென்யூ நகரில் திருடிய நகைகளை மட்டும் பித்தளை பொருட்கள் இருப்பதாக கருதி ஆமந்த கடவு ஆற்றில் வீசியதாகவும் மேலும் ரொக்கம் 10,000/– பணத்தை சூதாடி செலவு செய்ததாகவும் திவான் (எ) சுப்பிரமணியன் சொன்னார் என்றும், கோயம்புத்தூர் செட்டி பாளையத்தில் நகைகளை கைப்பற்றியதற்காக தயார் செய்யப்பட்ட மகசரில் இருவரும் தனித்தனியாக கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12) ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.4 உடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகவும், நகைகளின் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகைப்படத்தில் உள்ள நகை தான் TMS லே அவுட்டில் கைப்பற்றிய நகைகள் என்றும் மேற்படி நகைகளின் புகைப்படம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13) அ.சா.5 கிருஷ்ணமூர்த்தி என்பவர் கடந்த 17.02.2025ம் தேதி

உடுமலை காவல் நிலையத்தில் நிலைய நிலைய அலுவலில் இருந்த போது நேரில் ஆஜரான போடிப்பட்டி எலையமுத்தூர் ரோடு, கமலம் மில் பின்புறம் வசிக்கும் மணி த/பெ.நாராயணசாமி என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண்.94/2025 ச/பி. 331(3), 331(4), 305 BNS–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை நீதிமன்றத்திற்கும் மற்றொரு நகலை புலன் விசாணைக்காக அ.சா.6 எடுத்து கொண்டுள்ளார். முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14) பின்னர் சம்பவ இடம் சென்று அன்றைய தினம் 23.15 மணிக்கு சாட்சிகள் சின்னதுரை மற்றும் மாணிக்கராஜ் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சாட்சிகள் மணி, காயத்திரி, குமுதவள்ளி, சங்கீதா, சபரிநாதன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இந்த வழக்கு பாரி குற்ற வழக்கு என்பதால் எதிரிகளை கண்டறியவும் பழங்குற்றவாளிகளை தணிக்கை செய்யவும் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

15) அ.சா.6 கோபாலகிருஷ்ணன் என்பவர் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவர் பதிவு செய்து, மேல் விசாரணைக்காக 10.04.2025 ம் தேதி அ.சா.6 எடுத்து கொண்டார். பின்னர் ஏற்கனவே விசாரித்து சாட்சிகள் மணி, காயத்திரி, குமுதவள்ளி, சங்கீதா, சபரிநாதன், சின்னதுரை மாணிக்கராஜ் ஆகியோரை தனித்தனியாக விசாரித்த போது புதிய சங்கதிகள் எதும் கூறாததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

16) அன்றைய தினம் 10.04.2025 ஆம் தேதி சம்பவ இடங்களுக்கு சென்று விட்டு 11.45 மணியளவில் குற்றத்தடுப்பு நடவடிக்கையாக உடுமலைப்பேட்டை – தாராபுரம் ரோடு, அய்யலு மீனாட்சி நகர் பிரிவு அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த TN 38 BE 1609 என்ற என்னுள்ள பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் வந்தவரை காவல் குழுவினருடன் நிறுத்திய போது, அந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் தப்பிக்க முயற்சி செய்தவரை சுற்றி வளைத்து விசாரித்த போது மோட்டார் சைக்கிள் டேங்க் கவரில் இரும்பு ராடு ஒன்று இருந்ததால் தொடர்ந்து அவரை பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயரை திவான் என்கின்ற சுப்பிரமணியன், வயது 22, தகப்பனார் பெயர் நடராஜன், கீரநத்தம் கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும், தற்சமயம் இரண்டாவது வீதி, அண்ணா நகர், செட்டிபாளையத்தில் குடியிருப்பதாகவும், தொடர்ந்து விசாரிக்கும் பொழுது அவர் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்ததால் அவரை தொடர் விசாரணையில் விசாரித்த போது அவர் உடுமலை, தாராபுரம் ரோடு, இந்திரா நகர், சேரன் நகர், மின்னகர், காந்திநகர், அதிஷ்டா கார்டன் ஆகிய பகுதிகளில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி, துன்புறுத்தலும் இன்றி, ஆசை வார்த்தை இல்லாமலும் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதாக சொன்னதால் சாட்சிகள் கார்த்தி மற்றும் முகமது சபீர் ஆகிய முன்னிலையில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

17) அவர் மேற்படி உடுமலை, தாராபுரம் ரோடு, இந்திரா நகர், சேரன் நகர், மின்னகர், காந்திநகர், அதிஷ்டா கார்டன் ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் புகுந்து திருடியதாக ஒப்புக் கொண்டவரை அழைத்து கோயம்புத்தூர் செட்டிபாளைத்தில் அவர் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டில் துணிகளுக்கு அடியில் மறைத்து வைத்திருந்த நகைகளை ஆஜர் செய்கிறேன் என்று

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சி மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்றும் அ.சா.6 ம் கையொப்பம் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18) பின்னர் அதே சாட்சிகளுடன் எதிரி சொன்ன செட்டிபாளையம் அண்ணா நகர் வீட்டிற்கு சென்ற போது எதிரி எடுத்து ஆஜர் செய்துள்ளார். இந்த வழக்கில் 1. தங்க நெக்லஸ்–1 3 பவுன், 2.தங்க காயின்–1/2 பவுன், 3.தங்க தாலி குண்டு–2 மற்றும் தங்க தாலி காசு–2 ஆகியவை சேர்ந்து சுமார் 1 பவுன், 4.தங்க மூக்குத்தி –3 சுமார் ¼ பவுன் ஆகிய நகைகளை டி எம் எஸ் லேஅவுட்டில் உள்ள வாதியின் வீட்டில் திருடியதாக எடுத்து ஆஜர் செய்துள்ளார். அதனை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். அந்த வீட்டில் மேலும் திருடியதாக பணம் ரூ.40000/– செலவு செய்ததாக எதிரி கூறியுள்ளார்.

19) பின்னர் வேறு இடங்களில் திருடிய சொத்துக்களை ஆஜர்படுத்தி அதற்குண்டான நகைகளை எதிரி எடுத்து ஆஜர்படுத்தியதை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி பின்னர் நிலையம் கொண்டுவந்து எதிரியை சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீதிமன்ற காவலுக்காக பாரா காவல் வசம் ஒப்புவித்துள்ளார். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அசல் ஆவணம் குற்ற எண்.182/2025 வழக்கில் தாக்கல் செய்துள்துள்ளார். இரும்பு ராடு மற்றும் பிளாட்டினா இரு சக்கர வாகனத்தையும் குற்ற எண்.182/2025 வழக்கில் ஆஜர் படுத்தியுள்ளார். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளார். பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முகமது சபிர் மற்றும் கார்த்தி என்பவர்களை விசாரித்தும் மற்றும் வழக்கின் வாதி மணி என்பவரை விசாரித்தும் மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு சொத்துக்களை படிவம் 91 வழியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

20) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் எதிரியிடம் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 351(1) (ஆ)–ன் கீழ் விளக்கி விசாரணை செய்தபோது எதிரி தனக்கு எதிரான அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்துரைத்துள்ளார். மேலும் தான் நிரபராதி எனவும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறினார். எனினும் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரணைக்கு உட்படுத்தவில்லை.

21) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றுகள் மற்றும் ஆவணச்சான்றுகள் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டுமென்று வாதிட்டார்.

22) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போதுசொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி போலிசார் வரவில்லை என்றும், போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக அ.சா.1 ஆனவர் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், புகாரிலும் போலிசார் விசாரணையிலும் பணத்தின் டிமானிநேசன் மற்றும் என்ன முறையில வந்ததது என்று சொல்லவில்லை என்றும், அ.சா.2 ஆனவர் தன்னை போலிசார் விசாரிக்கவில்லை என்று முரண்பட்டு கூறியுள்ளார் என்றும், பார்வை மகசர் சாட்சியானவர் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையது அல்ல என்று கூறியுள்ளார் என்றும், எதிரியானவர் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் வழங்கவில்லை என்றும், அயலு மீனாட்சி நகரில எந்த ஒரு பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், அ.சா.4 ஆனவர் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் மேற்படி

கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துள்ளார் என்றும், எதிரி மளிகை கடை வேலை செய்து வருகிறார் என்றும் போலிசாரால் புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றும் வாதிட்டார்.

23) மேலும் அ.சா.6 ஆனவர் சட்டத்திற்கு புறம்பாக காவல் எடுத்து அவரை துன்புறத்தியதன் விளைவாக அவர் அவரது உயிருக்கு ஆபத்தான நிலையில் எதிரியை மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள் என்றும், இந்த வழக்கு சம்பவங்கள் ஒன்றுக்கு மேற்படி நபர்களால் செய்யக்கூடிய வகையில் அனுமானிக்கும்படி உள்ளது என்றும், காவல் நிலையத்தில் இருந்த வாகனத்தை இந்த இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ளது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவ இடத்திலிருந்து எதிரி வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ள நிலையில் போக ஒரு மணி நேரம் மற்றும் வர ஒரு மணி நேரம் ஆகும் என்ற நிலையில கோயம்புத்துார் செட்டிப்பாளையம் சென்று அங்கு எட்டு வழக்கிற்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து பொருட்களை கைப்பற்றி வந்திருக்க இயலாது என்றும், இவ்வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், எனவே ஒருபோதும் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டார்.

**<u>பிரச்சனையும் தீர்வும்</u>**

24) இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே இவ்வழக்கின் தீர்வுக்கான பிரச்சனை ஆகும்.

25) இந்நிலையில் மேற்படி சம்பவ தினம் மற்றும் சம்பவ நேரம் மற்றும் சம்பவ இடத்தைப் பொறுத்து அ.சா.ஆ.1 ஆன புகாரைப் பரிசீலிக்கையில் 2/211. TMS லே அவுட் பின்புறம், எலையமுத்தூர் ரோடு, போடிப்பட்டியில் உள்ள வாதியின் வீட்டில் வாதியானவர் கடந்த 16.02.2025 ஆம் தேதி மாலை 07.00 மணிக்கு மனைவியுடன் வேலைக்கு சென்றுவிட்டு 17.02.2025 ஆம் தேதி மதியம் 3.30 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு, அவ்வாறே அ.சா.ஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

26) இதனை பொறுத்து அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில் அ.சா.1 ஆனவர் தனது சாட்சியத்தில் உடுமலை எலையமுத்தூர் பிரிவில் உள்ள தனது வீட்டை பூட்டிவிட்டு கடந்த 16.02.2025 ம் தேதி 03.30 மணிக்கு ஜல்லிப்பட்டிக்கு கேட்டரிங்க சென்டருக்கு மனைவியுடன் சென்றுவிட்டு கடந்த 17.02.2025 ம் தேதி மதியம் 03.30 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்தபோது இவ்வழக்குச் சம்பவம் நடைபெற்றிருந்ததாக கூறியுள்ளார்.

27) மேலும் கேள்விநிலை சாட்சியான அ.சா.2 ன் முதல் விசாரணையில் உடுமலை எலையமுத்தூர் பிரிவு ஆர்ட்ஸ் காலேஜ் ரோட்டில் வசித்து வருவதாகவும், கடந்த 16.02.2025 ம் தேதி 7.00 மணிக்கு தானும், தனது கணவரும் ஜல்லிபட்டி கேட்டரிங் வேலைக்காக வேலை செய்து வந்த பின்னர் 17.02.2025 ம் தேதி 3.30 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது இவ்வழக்குச் சம்பவம் நடந்துள்ளதாக அ.சா.ஆ.1 ஆன புகாருக்கும், அ.சா.1 மற்றும் தனது முதல் விசாரணைக்கும் ஒத்துப் போகும் வகையில் கூறியுள்ளார்.

28) மேலும், அ.சா.5 கிருஷ்ணமூர்த்தி முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி தனது முதல் விசாரணையில்கடந்த 17.02.2025 ம் தேதி உடுமலை காவல் நிலையத்தில் மணி த/பெ.நாராயணசாமி என்பவர் கொடுத்த எழுத்து

மூலமான அ.சா.ஆ.1 ஆன புகார் மனுவினை பெற்று அ.சா.ஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்குக் கோப்பை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துவிட்டு, சம்பவ இடம் சென்று அன்றைய தினம் 23.15 மணிக்கு சாட்சிகள் சின்னதுரை மற்றும் மாணிக்கராஜ் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.6 ஆன மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.7 ஆன பார்வை மகஜர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார்.

29) இந்நிலையில் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 சின்னதுரை என்பவர் தனது முதல் விசாரணையில் அசா.1 மணியின் வீட்டில் திருடு போயிருந்ததாகவும், அங்கு போலிசார் நின்று கொண்டிருந்ததாகவும், அங்கு DSP இருந்தார், SI ரேங்கில் விசாரித்து கொண்டிருந்ததாகவும், SI மேப் மற்றும் வரைபடம் வரைந்து இடங்களை பற்றி கேட்டதற்கு, அருகில் இருந்தவருக்கு சொல்ல தெரியவில்லை என்றும், அருகில் உள்ள வீடு விவரங்களை பக்கத்தில் உள்ள தோப்பின் விவரங்களை அ.சா.3 சொல்லியுள்ளார். போலிசார் அதை குறித்து தனியாக 1 ½ பக்கம் அளவில் எழுதி கையொப்பம் பெற்று கொண்டதாகவும், விவரங்களை தெரிந்து கொண்டு கையொப்பம் செய்ததாகவும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு ஒத்துப் போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

30) மேலும் அ.சா.3 ன் குறுக்கு விசாரணையில் பார்வை மகசரில் உங்கள் சாட்சி கையெழுத்து இல்லை என்றால் சரிதான் என்றும், ஆனால் நான் கையெழுத்து போட்டேன் என்றும் கூறியுள்ள நிலையில் அ.சா.ஆ.7 பார்வை மகசரினைப் பரிசீலிக்கையில் மேற்படி பார்வை மகசர் சாட்சிகளின் கையொப்பங்கள் இடம் பெறவில்லை என்பது தெரியவருகிற நிலையில், மேற்படி பார்வை மகசரில் இவரது முன்னிலையில் தான் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.7 பார்வை மகசர் தயார் செய்யப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து அ.சா.5 ஆனவரின் சாட்சியமும் அ.சா.3 ஆனவரின் சாட்சியமும் ஒத்துப்போவது

தெரியவருகிறது. எனவே பார்வை மகசரில் கையொப்பம் இல்லை என்ற சங்கதியானது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றத்தின் தன்மையை மாற்றும் வகையில் அமையாத சங்கதி என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

31) அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் அ.சா.5 கொடுத்த வழக்குக் கோப்பை கடந்த 10.04.2025 ஆம் தேதி காலை 10 மணிக்கு பெற்றுக் கொண்டதாகவும், எதிரி மீது வழக்குகள் அனைத்தும் வெவ்வேறு தேதிகளில் நடைபெற்றது என்றும், அந்த காலங்களில் நடைபெற்றதாக சொல்லப்படும் அனைத்து வழக்குகளையும் ஒரே சார்பு ஆய்வாளர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் ஆமாம் என்றும், அவர குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் என்பதால் அவர்தான் பதிவு செய்துள்ளார் என்றும், முதல் முறை எதிரியை எந்த இடத்தில் எத்தனை மணிக்கு பார்த்தீர்கள் என்றால் 10.04.2025 ஆம் தேதி 11.45 மணிக்கு என்றும், எதிரியை இறுதியாக 10.04.2025 ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததாகவும் கூறியுள்ளார்.

32) மேலும் எதிரி தரப்பில் புகாரானது 2 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று முன்மொழியப்பட்டுள்ள நிலையில் அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் புகார் 2 நாட்கள் காலதாமதமாக உள்ளது என்றால 22ம் தேதி இரவு பார்த்துவிட்டு 23ம் தேதி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். இது முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் மேற்படி காலதாமதம் குறித்து கேள்விகள் கேட்கப்படவில்லை. மேலும் அ.சா.1 ன் காவல் நிலையத்திற்கு போகும் போது தனது வீட்டில் புகாரினை எழுதிக் கொண்டு சென்றோம் என்றும், சம்பவம் பற்றி உடனடியாக காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கவில்லை என்றால் 3.30 மணிக்கு வந்து பார்த்தபின் 5.00 மணிக்கு கொடுத்ததாக கூறியுள்ளார். இந்நிலையில் அ.சா.ஆ.1 ஆன புகாரில்

17.02.2025 ஆம் தேதி 22.00 மணிக்கு வாதியானவர் நிலையம் ஆஜராகி கொடுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் புகாரானது 1 ½ மணி நேரம் தாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது தெரியவதால் அதனை காலதாமதகமாக கருத இயலாது.

33) இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2017 (1)MWN (Cr) 29 SC Yogesh Singh Vs Mahabeer Singh and others என்ற வழக்கில்

> "CRIMINAL PROCEDURE CODE, 1973 (2 of 1974) Section 157– First Information Report – Delay in forwarding FIR to Court – Effect– In terms of Section 157, Police required to forward copy of FIR to Magistrate promptly without any delay – However, merely because of delay in sending FIR to Magistrate, Prosecution case would not become unreliable vitiating trial itself in all cases – In absence of any prejudice to Accused or any other infirmity, Prosecution case would not become unreliable – In instant case, no case of Accused that they have been prejudiced by alleged delay in dispatch of FIR to Magistrate – Delay, held, of no consequence"

என்று வழங்கிய சட்ட முன்தீர்ப்பின் விளக்கத்தினையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. எனவே மேற்படி கால தாமதமானது எவ்வகையில் எதிரிக்கு பாதிப்பை ஏற்படுத்தியது என்பது குறித்து எதிரி தரப்பில் விளக்காததால் மேற்படி காலதாமதம் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக கருத இயலாது.

34) எனவே, இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆனவர்களின் குறுக்கு விசாரணை அவர்களின் முதன்மை சாட்சியத்தை குலைக்கும் வகையில் அமையாத சூழ்நிலையிலும், பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ஆனவர் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு ஒத்துபோகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளதும், அதற்கு வலுவூட்டும் வகையில் அ.சா.ஆ.6 ஆன மாதிரி வரைபடமும், அ.சா.ஆ.7 ஆன பார்வை மகசரும் அமைந்துள்ளதும் தெரியவருகிறது. ஆகையினால், மேற்கண்ட விவாதங்களில் இருந்தும், சாட்சிய சான்றாவணங்களில் இருந்தும், இவ்வழக்கின் சம்பவ தேதி, நேரம், இடத்தை

பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

35) இந்நிலையில் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் இல்லாத நிலையில் அரசு தரப்பானது எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்களை (Chain of Circumstance Evidence) தொடர்பு படுத்தி எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபித்துள்ளதா என பரிசீலிக்க வேண்டியது இந்நீதிமன்றத்தின் கடமையாகும்.

36) இந்நிலையில், இவ்வழக்கில் எதிரியின் அடையாளம் மற்றும் குற்றச் செயல்களைப் பொறுத்து பரிசீலிக்கையில், அ.சா.ஆ.1 ஆன புகாரினைப் பரிசீலிக்கையில் மேற்படி சம்பவ தினத்தில் வீட்டிற்கு வந்து பார்த்தபோது முன்பக்க கதவு கம்பி ராடால் நெம்பி கதவையும் பூட்டையும் உடைத்து திறந்து இருந்ததாகவும், பெட்ரூமில் இருந்த இரும்பு பீரோ மற்றும் மரபீரோ மேல் பகுதியில் வைத்திருந்த சாவியை எடுத்து திறந்து துணிமணிகளை கீழே சிதறி இரும்பு பீரோவின் லாக்கரில் வைத்திருந்த 1.தங்க நெக்லஸ் 3 பவுன்–1, தங்க காயின் ½ பேவுன் –2, தாலிகுண்டு–2, தாலி காசு–2 என மொத்தம் ஒரு பவுன், மூக்குத்தி–3 ½ பவுன், ஆக மொத்தம் 4 ¾ பவுன் தங்க நகைகளும் அதே லாக்கரில் வைத்திருந்த பணம் ரூ.40,000/–யும் காணவில்லை என்றும், மேற்படி நகைகளை அடையாளம் தெரியாத நபர் யாரோ எடுத்து சென்றுள்ளார் என்றும், மேற்படி நகைகளின் மதிப்பு சுமார் ரூ.87,500/– என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

37) இதனைப் பொறுத்து அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியின் முதல் விசாரணையில் 10.04.2025 ஆம் தேதி 11.45 மணியளவில் உடுமலைப்பேட்டை – தாராபுரம் ரோடு, அய்யலு மீனாட்சி நகர் பிரிவு அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த TN 38 BE 1609 என்ற என்னுள்ள பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் வந்தவர் தப்பிக்க முயற்சி செய்தவரை சுற்றி வளைத்து விசாரித்த போது மோட்டார் சைக்கிள்

டேங்க் கவரில் இரும்பு ராடு ஒன்று இருந்ததால் தொடர்ந்து அவரை பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயரை திவான் என்கின்ற சுப்பிரமணியன், வயது 22, தகப்பனார் பெயர் நடராஜன், கீரநத்தம் கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் தற்சமயம் இரண்டாவது வீதி, அண்ணா நகர், செட்டிபாளையத்தில் குடியிருப்பதாகவும் பின்னிட்டு அவர் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளித்ததால் தொடர்ந்து விசாரித்தபோது அவர் தான் திருடியதை ஒப்புக் கொண்டு தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், கார்த்தி மற்றும் முகமது சபீர் ஆகிய முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் கூறியுள்ளார்.

38) இந்நிலையில் ஒப்புதல் வாக்கமூல சாட்சியான அ.ச 3 ஆன கார்த்திக் என்பவர் CC No 324/2025 குற்ற எண்42/2025 என்ற வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மாரியப்பன் என்பவரது வீட்டின் அருகில் குடியிரக்கும் நபர் என்பதால் அக்கறையுள்ள சாட்சி என்று எதிரி தரப்பில் கட்சி எடுத்துள்ள நிலையில் இவரது சாட்சியததின் நம்பகத்தன்மையை கவனத்துடன் பரிசீலிக்க வேண்டியது இந்நீதிமன்றத்தின் கடமையாகும்.

39) இந்நிலையில் அ.சா.4 ஒப்புதல் வாக்குமூல சாட்சி கார்த்திக் என்பவரும் தனது முதல் விசாரணையில் கடந்த 10.04.2025ம் தேதி போலிசார் அயலு மீனாட்சி நகர் பஸ்ஸ்டாப் அருகில் சோதனை செய்து கொண்டிருந்த போது, ஒருவரது பைக்கில் ஒரு இரும்பு ராடு இருந்ததால் அந்த நபரை எங்கிருந்து வருகிறிர்கள் என்ன என்று தனது முன்னிலையில் விசாரித்ததாகவும், மேற்படி நபரிடம் போலிசார் விசாரணை மேற்கொண்டபோது, அவர் பெயர் திவான் (எ) சுப்பிரமணியன் என்றும், கோயம்புத்தூர் செட்டிபாளையத்தை சேர்நதவர் என்றும் கூறினார் என்றும் சொல்லியுள்ளார். மேலும் அ.சா.4ன் குறுக்கு விசாரணையிலும் போலிசார் சோதனை செய்தபோது 6 இரு சக்கர வாகனம், 1 டாட்டா ஏஸ் வாகனம் இருந்தது என்றும், எல்லாரையும்

விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும் கூறி சோதனை செய்த இடத்திற்கு அருகில் இருந்த இடங்கள் குறித்து சங்கர் நகர் பஸ் ஸ்டாப் என்பது இரண்டு பேருந்து நிறுத்தங்கள் உள்ளன என்றும், அய்யலு மீனாட்சி நகரிலும் 2 பேருந்து நிறுத்தங்கள் உள்ளது என்றும், அயலு மீனாட்சி நகரின் ரோட்டுக்கு கிழப்புறம் ஒரு பேருந்து நிறுத்தம்ட உள்ளது என்றும், ரோட்டுக்கு மேற்புறம் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். இதனை மறுத்து புலன் விசாரணை அதிகாரியிடம் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே மேற்படி தேதியில் போலிசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டு, எதிரியை விசாரித்து, அ.சா.4 ஆனவரின் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்டுள்ளது என்பதற்கு ஒத்துப்போகும் வகையில் இவரது சாட்சியம் அமைந்துள்ளது தெரியவருகிறது.

40) மேலும் அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியின் முதல் விசாரணையில் எதிரியானவர் உடுமலை, தாராபுரம் ரோடு, இந்திரா நகர், சேரன் நகர், மின்னகர், காந்திநகர், அதிஷ்டா கார்டன் ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் புகுந்து திருடியதாக ஒப்புக் கொண்டவரை அழைத்து கோயம்புத்துார் செட்டிபாளைத்தில் அவர் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டில் துணிகளுக்கு அடியில் மறைத்து வைத்திருந்த நகைகளை ஆஜர் செய்கிறேன் என்று கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அதே சாட்சிகளுடன் எதிரி சொன்ன செட்டிபாளையம் அண்ணா நகர் வீட்டிற்கு சென்ற போது எதிரி எடுத்து ஆஜர் செய்துள்ளார். இந்த வழக்கில் 1. தங்க நெக்லஸ்–1 3 பவுன், 2.தங்க காயின்–1/2 பவுன், 3.தங்க தாலி குண்டு–2 மற்றும் தங்க தாலி காசு–2 ஆகியவை சேர்ந்து சுமார் 1 பவுன், 4.தங்க மூக்குத்தி –3 சுமார் ¼ பவுன் ஆகிய நகைகளை டி எம் எஸ் லேஅவுட்டில் உள்ள வாதியின் வீட்டில் திருடியதாக எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும் மேலும் அந்த வீட்டில்

மேலும் திருடியதாக பணம் ரூ.40000/- செலவு செய்ததாக எதிரி கூறியதாகவும் சொல்லியுள்ளார்.

41) இந்நிலையில் அ.சா.4 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியின் முதல் விசாரணையில் எதிரியானவர் 8 வீடுகளில் திருடியதைப் பொறத்தும் இவ்வழக்கில் TMS லே அவுட்டில் 3 பவுன் தங்க நெக்லஸ்-1, ½ பவுன் தங்க காயின்-1, தங்க தாலிகுண்டு -2 தங்க தாலி காசு இரண்டும் சேர்ந்து 1 பவுன், தங்க மூக்குத்தி -3 ¼ பவுன் உடையது ஆகிய பொருட்களை செட்டிப்பாளையத்தில் உள்ள தனது வீட்டில் வைத்திருப்பதாக எதிரி போலிசாரிடம் சொன்னதாகவும் கூறியுள்ளார். இந்நிலையில் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 ன் குறுக்கு விசாரணையில் தங்க பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றும் வெள்ளிப் பொருட்கள் விற்று செலவு செய்துவிட்டார், திருடிய பணத்தை ரூ.40,000/- செலவு செய்துவிட்டதாக எதிரி கூறியதாகவும் சொல்லியுள்ளார்.

42) மேற்படி புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 ன் குறுக்கு விசாரணையில் ஒப்புதல் வாக்குமூலமானது கம்ப்பூட்டர் ஆப்ரேட்டரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும் கூறியுள்ள நிலையில், தொடர் குறுக்கு விசாரணையில் எதிரியை கைது செய்வதாக சொல்லக்கூடிய இடத்திற்கு கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் அழைத்துச் சென்றதாகவும் வழக்குக் கோப்பில் எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும் கூறியுள்ளார். எனினும், இச்சங்கதி எதிரி மீதான குற்றத் தன்மையை குலைக்கும் வகையில் அமையவில்லை.

43) மேலும் அ.சா.4 ஆனவர் போலிசார் தங்களையும் அழைத்து கொண்டு கோயம்புத்துார் செட்டிபாளையததில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று திவான் (எ) சுப்பிரமணியன் என்பவர் அவரது வீட்டின் செல்பில் இருந்து நகைகளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும் கூறியுள்ளார்.

44) இதனைப் பொறுத்து அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசரினைப்

பரிசீலிக்கையில் கைப்பற்றிய தேதி, மணி, இடம் என்ற காலத்தில் 10.04.2025 ஆம் தேதி 16.15 மணியளவில் கோயம்புத்தூர் செட்டிப்பளையம், அண்ணாநகரில் எதிரி திவான் என்கிற சுப்பிரமணியன் குடியிருக்கும் கூட்டின் செல்பிலிருந்து எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.சா.ஆ.8 ஆன ஒப்புதல் வாக்குமூலத்தினைப் பரிசீலிக்கையில் மேற்படி நகைகளை செட்டிப்பாளையம் அண்ணாநகரில் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டில் செல்பில் துணிகளுக்கு அடியில் மறைத்து வைத்திருப்பதை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வழக்குச் சொத்தானது எங்கிருந்து எடுக்கப்பட்டது என்பது குறித்து அ.சா.4 ஆன ஒப்புத்தல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியானவர் அ.சா.ஆ.3 ஆன கைப்பற்றுதல் மகசருக்கும், அ.சா.ஆ.8 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிக்கும் ஒத்துப் போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

45) மேலும் அ.சா.4 ன் குறுக்கு விசாரணையில் கோவைக்கு என்னென்ன வழியில் சென்றீர்கள் என்றால் உடுமலை – பொள்ளாச்சி, பொள்ளாச்சி – ஒத்த கால் மண்டபம் வழியாக வலதுபுறமாக செட்டிப்பாளையம் சென்றோம் என்றும், எதிரியின் வீட்டில் இரண்டு அறைகள் என்று நினைக்கிறேன் என்றும், நான் ஹாலிலேயே நின்றுவிட்டேன், உடன் போலிசாரும் வந்தார்கள் என்றும், செட்டிப்பாளையம் சென்று ஏழு கையொப்பம் செய்ததாகவும், மொத்தமாக இந்த வழக்கில் எட்டு கையெழுத்து போட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு போலிசாருடன் எதிரியின் வீட்டிற்கு சென்றதைப் பொறுத்தும், அங்கு மேற்படி நகைகள் கைப்பற்றியது பொறுத்தும், அதற்காக கையொப்பம் செய்தது பற்றியும் குறிப்பிட்டு கூறியுள்ள நிலையில் இவ்வழக்கின்படி எதிரியிடம் இருந்து பெற்ற ஒரு ஒப்புதல் வாக்கு மூலத்தின் படி 7 கைப்பற்றுதல் மகசர்கள் தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் மொத்தம் 8 கையெழுத்துக்கள் போட்டுள்ளதாக வழக்கு

ஆவணங்களுடன் ஒத்துப்போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

46) மேலும் எதிரி தரப்பில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எங்கு சென்று பிரிண்ட் எடுக்கப்பட்டது என்பது குறித்தும், ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படும் போது அ.சா.4 ஆனவர் அங்கு இல்லை என்பது குறித்தும் கேள்விகள் கேட்கப்பட்டுள்ள நிலையில், அ.சா.4 ன் குறுக்கு விசாரணையில் ஜிம்முக்கு 10 மணிக்கு செல்லும் போது கூட்டமாக இருந்தது என்றும், அப்பொழுது செல்லும் போது டைப் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், ஜிம்முக்கு சென்று திரும்பி வரும் பொழுதும் டைப் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அதில் தான் கையொப்பம் செய்தேன் என்றும், எங்கு வைத்து பிரிண்ட் எடுத்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றும் முரண்பட்டு கூறியுள்ள நிலையில் பின்னிட்ட அ.சா.4 ன் தொடர் குறுக்கு விசாரணையில் லேப்டாப்பில் இருந்து பென்டிரைவில் பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுக்க ஒரு போலிசார் சென்றார் என்றும், இன்ஸ்பெக்டர் மற்றும் இரு போலிசார் எங்களுடன் இருந்தார்கள் என்றும், சென்ற போலிசார் 45 நிமிடம் கழித்து வந்தார் என்றும் கையெழுத்து போட்ட பேப்பரில் உள்ளதை படித்து காண்பித்தார்கள் என்றும் கூறியுள்ளார். ஆகையினால் அ.சா.4 ஆனவர் தான் கையொப்பம் செய்த ஆவணத்தில் உள்ளதை போலிசார் படித்து காண்பித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ள நிலையில் மேற்படி எதிரி தரப்பு கட்சி நிராகரிக்கப்படுகிறது.

47) மேலும் அ.சா.4 ன் குறுக்கு விசாரணையில் ஜிம்முக்கு 10 மணிக்கு செல்லும் போது கூட்டமாக இருந்தது என்றும், அப்பொழுது செல்லும் போது டைப் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், ஜிம்முக்கு சென்று திரும்பி வரும் பொழுதும் டைப் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அதில் தான் கையொப்பம் செய்தேன் என்றும் கூறியிருப்பினும் மேற்படி அ.சா.4 ஆனவரிடம் எதிரி தரப்பில் எதை டைப் செய்து கொண்டிருந்தார்கள் என்பதைப் பொறுத்தும், எதிரி எந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தார் என்பதைப் பொறுத்தும் தெளிவாக

குறிப்பிட்டு கேள்விகள் கேட்கப்படாத நிலையில் அ.சா.4 ஆனவர் மொத்தம் 8 கையெழுத்துக்கள் போட்டுள்ள நிலையில் எந்த கையெழுத்தை பொறுத்து குறிப்பிட்டு கேள்விகள் கேட்கப்படாத நிலையில் அ.சா.4 ஆனவர் பொதுவான கேள்விக்கு அளிக்கப்பட்ட பொதுவான பதில்களின் மூலம் அரசு தரப்பு வழக்கை முற்றிலும் நிராகரிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

48) மேலும் ஒப்புதல் வாக்குமூலம்பெற்ற இடத்திலிருந்து எதிரி வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ள நிலையில் போக ஒரு மணி நேரம் மற்றும் வர ஒரு மணி நேரம் ஆகும் என்ற நிலையில் கோயம்புத்துார் செட்டிப்பாளையம் சென்று அங்கு எட்டு வழக்கிற்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து பொருட்களை கைப்பற்றி வந்திருக்க இயலாது என்று வாதிடப்பட்டிருப்பினும் ஒப்புதல் வாக்மூலமானது 11.45 மணியளிவில் பெற்றப்பட்டுள்ள நிலையில் கைப்பற்றதல் மகசரானது 16.45 மணியளவில் மற்ற வழக்குகளில் தயார் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி எதிரி தரப்பு வாதம் நிராகரிக்கப்படுகிறது.

49) ஆகையினால் மேலே கண்ட விவாதங்ககளின் படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியின் சாட்சியங்களும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கும் இவ்வழக்குச் சங்திகளுக்கும் ஒத்துப் போகும் வகையில் அமைந்துள்ள நிலையிலும், அ.சா4 ஆனவரின் சாட்சியத்தின் நம்பகத்தன்மையை குலைக்கும் வகையில் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை அமையவில்லை என்பது தெரியவருகிற நிலையிலும் இவ்வழக்குச் சொத்துக்களானது அ.சா.ஆ.8 ஆன ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின்படி கோவை செட்டிப்பாளையத்தில் உள்ள எதிரியின் வீட்டில் இருந்து தான் கைப்பற்றப்பட்டுள்ளது என்பது குறித்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

50) மேலும், எதிரி தரப்பில் எதிரியிடம் கைப்பற்றியதாக சொல்லியுள்ள பொருட்கள் புகார்தாரர் வசம் காண்பித்து உறுதி செய்துவிட்டு கைப்பற்றப்படவில்லை என்று முன்மொழியப்பட்டுள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியானவர் தனது குறுக்கு விசாரணையில் அன்றைய தினமே புகார்தாரரிடம் அடையாளம் காட்டி 18.00 மணிக்கு மறு வாக்குமூலம் பெற்றுள்ளதாக கூறியுள்ள நிலையில் அ.சா.1ன் முதல் விசாரணையில் ஸ்டில் பீரோ –1, மர பீரோ –1 திறந்தும் துணிகள் கலைந்தும் இருந்துள்ளது. பின்னர் பார்த்த போது இரும்பு பீரோவில் 3 பவுன் நெக்லஸ்– 1, ½ பவுன் காயின்–1, தாலி காசு–2 ,தாலி குண்டு–2, மூக்குத்தி 3 எண்ணிக்கை, ¼ பவுன் இருந்தது மொத்தமாக 4 ¾ பவுன் தங்க நகையும் பணம் ரூ.40,000/– காணவில்லை என்றும், இது குறித்து புகார் கொடுத்ததாகவும், பின்னர் களவு போன நகை 4 ¾ பவுன் நகையை நீதிமன்றத்தின் மூலமாக மனு தாக்கல் செய்து பெற்று கொண்டதாகவும் கூறியுள்ளார். மேற்படி சங்கதி குறித்து அ.சா.2 ஆனவரும் அ.சா.1ன் சாட்சியத்திற்கு ஒத்துபோகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

51) மேலும் அ.சா.1 ஆனவர் தனது குறுக்கு விசாரணையில் புகாரில் நகையின் மாடல் பற்றிய விவரம் சொல்லவில்லை என்றால் நெக்லஸ் காயின் என்று சொல்லியுள்ளேன் என்றும், நகைகளை வாங்கி சுமாராக 5 வருடம் இருக்கும் பில்கள் இல்லை என்றும், தாலி காசு குண்டு போன்றவற்றை வீட்டில் வைக்க மாட்டார்கள் என்றால் பெரிய மகளுடையது, புதியது அதானல் வைத்து விட்டு சென்றார் என்றும், காணாமல் போன பணம் கிடைக்கவில்லை என்றும் மேற்படி பணம் 500 ரூபாய் நோட்டுக்கள் என்றும் கூறியுள்ளார். மேலும் அ.சா.2 ஆனவரும் அவரது குறுக்கு விசாரணையில் நெக்லஸ் மட்டும் வாங்கி 20 வருடம் ஆகிறது என்றும், கணவர் நீதிமன்றத்தில் வாங்கி நகை புதிய நகை மாதிரி உள்ளது என்றால் பயன்படுத்தாமல் இருப்பதால் புதியதாக உள்ளது என்றும், காயின் மூன்று மாதங்களுக்கு முன் ஜனவரி மாதம் வாங்கப்பட்டது

என்றும், பேரக்குழந்தை பிறந்ததற்கு பரிசாக வந்தது என்றும் மேற்படி நகைகளை குறித்து இருவரும் ஒத்துப் போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே அ.சா.1 மற்றும் அசா.2 ஆனவர்கள் தங்களது சாட்சியங்களில் காணாமல் போன நகைகள் குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். இந்நிலையில் மேற்படி எதிரியிடம் இருந்து கைப்பற்றிய நகைகளை அ.சா.1 ஆனவர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார் என்பது தெரியவருகிறது.

52) மேலும் எதிரி தரப்பில் டோரை உடைக்கும் சத்தம் அருகில் உள்ளவர்களுக்கு கேட்க வாய்ப்புள்ளது என்று முன்மொழியப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதி குறித்து அ.சா.1 ஆனவரிடமும், புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 ஆனவரிடம் எதிரி தரப்பில் கேள்விகள் கேட்கப்படவில்லை.

53) மேலும் அ.சா.6 முதல் விசாரணையில் எதிரி அவரது மோட்டார் சைக்கிள் டேங்க் கவரில் இரும்பு ராடு ஒன்று இருந்ததாக கூறியுள்ள நிலையில் அ.சா.5 ன் குறுக்கு விசாரணையில் வீட்டின் கதவை உடைத்து செய்வது ஒரு நபரால் செய்ய இயலாது என்றால் செய்யலாம், ராடு வைத்து ஒரு நபரால் செய்ய இயலும் என்றும் கூறியுள்ள நிலையில் மேற்படி எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் டேங்க் கவரில் இரும்பு ராடு வைத்திருந்ததாக சொல்லியுள்ளதை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்பது தெரியவருகிறது. மேற்படி இரும்பு ராடு எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் டேங்க் கவரில் வைத்திருந்தார் என்பது குறித்து புலன் விசாரணை அதிகாரியிடன் கேள்விகள் முன்மொழியப்படாத நிலையில் மேற்படி வாதத்தை எதிரி தரப்பில் நிரூபித்துவிட்டதாக கருத இயலாது. மேலும் எதிரி தரப்பில் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரியானவர் இரும்பு ராடை ஒப்படைத்ததாக முன்மொழியப்பட்ட நிலையில் இரும்பு ராடு கைப்பற்றப்படவில்லை என கூறியிருப்பினும் இவ்வழக்கின் எதிரி மீது இந்நீதிமன்றத்ததில் நிலுவையில்

உள்ள CC No.173/2025 குற்ற எண். 182/2025 என்ற எண்ணில் கைப்பற்றுதல் மகசர் மூலம் மேற்படி ராடு கைப்பற்றப்பட்டுள்ளது தெரியவருகிறது.

54) மேலும் எதிரி தரப்பில் சிசிடிவி கேமரா குறித்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ள நிலையில் அ.சா.5 முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதியில் சிசிடிவி கேமரா பதிவுகள் உள்ள பகுதி என்றால் அப்போது அந்த பகுதியில் இல்லை என்றும், பக்கத்து வீட்டில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கிற்கான பதிவுகள் பதிவாகவில்லை என்று கூறியுள்ளார்.

55) மேலும் அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் எதிரியை கைது செய்ததாக சொல்லக்கூடிய 10.04.2025 ஆம் தேதிக்கு ஒரு வார காலத்திற்கு முன்பே சட்டத்திற்கு புறம்பாக காவலில் எடுத்தீர்கள் என்றால் சரியல்ல என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் 10.04.2025 ஆம்தேதி இரண்டு நாட்களுக்கு முன்பாக உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் இரவு 11.00 மணிக்கு மேல் சிகிக்சை சேர்ந்ததாக உள்ளது என்றால் தலை சுற்றல் வந்ததால் சேர்ந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றும், இரண்டு நாள் சிகிச்சைக்கு பின்னிட்டு 10.04.2025 ஆம் தேதி தான் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சிகிச்சை முடித்து மாத்திரை கொடுத்து அனுப்பியதாக சொல்லியுள்ளார் என்றும் கூறியுள்ள நிலையில் எதிரியானவரை சட்டத்திற்கு புறம்பாக காவலில் எடுத்து துன்புறுத்தியதன் விளைவாக அவரது உயிருக்கு ஆபத்தான நிலையில் அரசு மருத்துமனையில் சேர்த்துள்ளீர்கள் என முன்மொழியப்பட்டுள்ள நிலையில் அதற்கான சாட்சிய சான்றாவணங்களை முன்னிறுத்தவில்லை.

56) எனவே இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(அ)-ன் கீழ் " திருட்டு நடைபெற்றதற்கு பின்னர் திருட்டுப்பொருளை தன் உடைமையில்

வைத்திருக்கும் ஒரு மனிதர் அவர் உடைமையில் வைத்திருப்பதற்கு விபரம் கொடுத்தால் தவிர அவர் திருடன் என நீதிமன்றம் மெய்யெனக்கொள்ளலாம்" என்றுள்ள நிலையில். அ.சா.1 ஆனவர் வீட்டில் காணாமல் போன வழக்குச் சொத்துக்களை இவ்வழக்கில் எதிரி திவான் (எ) சுப்ரமணியன் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி திருடிய சொத்தை அவரது வீட்டிற்கு சென்று எதிரி எடுத்து ஆஜர் செய்த இவ்வழக்கின் வழக்குச் சொத்தை மேற்படி அ.சா.4 மற்றும் பட்டியல் சாட்சி–8 முகமது சபீர் ஆகியோர்கள் முன்னிலையில் இவ்வழக்குச் சொத்தை கைப்பற்றியுள்ளார்கள் என்பதையும், அதனை அ.சா.1 ஆனவர் நீதிமன்றத்தில் அ.சா.ஆ.4 ஆன நகைகளின் புகைப்படத்தின் மூலம் அடையாளப்படுத்தி உள்ள நிலையிலும், அ.சா.1 ஆனவர் வீட்டில் திருடுபோன செயினானதை மேற்படி அ.சா.ஆ.8 ஆன எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜர்கள் மூலமும் கைப்பற்றப்பட்டுள்ளதை அரசு தரப்பில் நிரூபித்துள்ள நிலையில், இதனைக் குறித்து எதிரிகள் தரப்பில் அவர் உடைமையில் வைத்திருப்பதற்கு விபரம் விளக்கப்படாத நிலையில், மேற்படி வழக்குச் சொத்துக்களை எதிரி தான் திருடியுள்ளார் என்பதை இந்நீதிமன்றம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114 (அ)–ன் கீழ் அனுமானிக்கிறது.

57) ஆகையினால் மேற்கண்ட விவாதங்களில் இருந்து சாட்சிய சாண்றாவணங்களின் இருந்தும், இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆனவர்களின் சாட்சியம் ஒருவருக்கொருவர் ஒத்துபோகும் வகையில் அமைந்துள்ள நிலையில் அவர்களது சாட்சியத்தின் நம்பகத்தன்மையை குலைக்கும் வகையில் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணை அமையாத சூழ்நிலையில், இவர்களது சாட்சியத்திற்கு வலுவூட்டும் வகையில் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.4 ஆனவரின் சாட்சியமும் அ.சா.6 ஆன புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியமும் அமைந்துள்ள சூழ்நிலையிலும்,

இவ்வழக்கில் எதிரி மீது சுமதப்பட்டப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 305(a)–ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

58) மேலும் இவ்வழக்கில் பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 331(4)–ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டை பொறுத்து பரிசீலிக்கும் முன்னர் மேற்படி சட்டப்பிரிவின் மூலக்கூறுகளை அறிந்து கொள்ள அவசியமாகிறது. அதன்படி,

ஒரு குற்றம் எதையும் செய்வதன்பொருட்டு இரவில்
பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதல் அல்லது
இரவில் கன்னமிடுதல் என்று விளக்குகிறது.

59) இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆன புகாரில் கடந்த 16.02.2025 ஆம் தேதி மாலை 07.00 மணிக்கு மனைவியுடன் வேலைக்கு சென்றுவிட்டு 17.02.2025 ஆம் தேதி மதியம் 3.30 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறியுள்ள நிலையில், அ.சா.1 ஆனவரின் சாட்சியத்தில் கடந்த 16.02.2025 ம் தேதி 03.30 மணிக்கு ஜல்லிப்பட்டிக்கு சென்றுவிட்டு கடந்த 17.02.2025 ஆம் தேதியன்று மதியம் 03.30 மணியளவில் வந்து பார்த்தபோது இவ்வழக்கு சம்பவம் நடந்திருந்ததாக சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில் அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியின் முதல் விசாரணையில் எதிரியானவர் தனது வீட்டில் செல்பின் அடியில் மறைத்து வைத்திருந்த நகைகளை ஆஜர் செய்கிறேன் என்று கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். இந்நிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தில் TMS என்று போர்டு வைக்கப்பட்டுள்ள பகுதியில் வாதியின் வீட்டில் கடந்த 17.02.2025 ஆம் தேதி இரவு 02.00 மணி சுமாருக்கு பூட்டியிருந்த வீட்டில் இருந்து கதவை ராடால் நெம்பி உடைத்து திருடியதாக காட்டப்பட்டுள்ளது.

60) மேற்படி சாட்சிய சான்றாவணங்களின் மூலம் சம்பவமானது இவ்வழக்குச் சம்பவமானது இரவில் நடந்ததை புலன் விசாரணை அதிகாரியான

அ.சா.6 மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.2 ஆனவர்களின் சாட்சியத்தின் மூலமும் அ.சா.ஆ.8 ஆன ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின் மூலமும் தெரியவருகிறது. எனவே, எதிரியின் மீது சுமத்தப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 331(4)–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்து விட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

61) மேலும் எதிரி பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவுகள் 331(4), 305(a)–ன் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானித்த நிலையில் எதிரிக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை பற்றி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023, பிரிவு 271(2)–ன் கீழ் வினவியபோது அவர்கள் பின்வருமாறு கூறினார்.

<u>குற்றஞ்சாட்டப்பட்ட எதிரியின் பதில்</u>

"குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு வேண்டுகிறேன்"

62) இவ்வழக்கில் குற்றத்தின் தன்மை மற்றும் குற்றச் சூழ்நிலையை கருத்திற்கொண்டு எதிரி நன்னடத்தை சட்டத்தின்கீழ் பலன்கள் பெற தகுதியற்றவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

63) மேலும், மேற்கண்ட குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் பதிலை கருத்திற்கொண்டும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் வயது, குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டும் எதிரியின் உடல்நிலையை கருத்திற்கொண்டும் தண்டனையில் பரிசீலிக்கப்படலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

64) முடிவாக எதிரி மீது வனையப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 331(4)–ன் கீழன குற்றத்திற்கு குறைந்தபட்ச தண்டனையாக ஒரு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 305(a)–ன் கீழன குற்றத்திற்கு குறைந்தபட்ச தண்டனையாக ஒரு வருடம்

கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தும், எதிரி வேறு வழக்கில் சிறையில் இருப்பதால் அபராதம் விதிக்கப்படாமலும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 271(2)–கீழ் தீர்ப்பு வழங்கப்படுகிறது. மேற்படி தண்டனை காலத்தை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது.

65) மேலும் CC No.130/2025, CC No.131/2025, CC No.323/2025, CC No.324/2025, CC No.325/2025, CC No.326/2025 ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட தண்டனைக் காலத்தினையும் ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது.

66) மேலும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 468–ன் கீழ் இவ்வழக்கின் எதிரியானவர் 10.04.2025 ஆம் தேதி முதல் 07.01.2026 வரை (273 நாட்கள்) சிறையில் இருந்த காலத்தினை தண்டனைக் காலத்தில் கழித்துக் கொள்ளவும் இந்நீதிமன்றம் உத்திரவிடுகிறது.

67) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தான அயிட்டம்.1–தங்க நெக்லஸ் –1 சுமார் 3 பவுன், அயிட்டம்.2–தங்க காயின் –1 சுமார் ½ பவுன், அயிட்டம்.3–தங்க தாலி குண்டு –2, தங்க தாலி காசு –2 எண்ணிக்கை சுமார் 1 பவுன், அயிட்டம்.4–தங்க மூக்குத்தி –3 சுமார் ¼ பவுன் ஆகியவை கைப்பற்றப்பட்டு PR No.85/2025 என்ற எண்ணில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அதன் உரிமையாளர் திரு.மணி த/பெ.நாராயணசாமி என்பவர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து Crl.M.P. No.316/2025 என்ற எண்ணில் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்குப் பிறகு அவரே வைத்துக்கொள்ளவும், பிணைமுறிப்பத்திரங்கள் ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கானது மேல் முறையீடு செய்யும்பட்சத்தில் மாண்புமிகு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க செயல்படவும் உத்திரவிடப்படுகிறது.

**Particulars under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| S. No | Description of the accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Cr.No | Name of the Police Station | Name | Father's Name | Occupation | Residency | Age |
| 1. | 94/2025 | Udumalpet | Subramaniyan @ Dhivan | Natarajan | Electrician | 559/18th Block, Kallukuli, Keeranatham Po, Coimbatore, Not at 2nd Street, Anna Nagar, hettipalayam, Coimbatore Dt. | 22/2025 |

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension | Release on Bail | Commitment | Commencement of Trial | Close of Trial | Sentence or Order | Service of copy of Judgment on accused | Explanation of Delay |
| 22.01.2025 | 23.01.2025 | 10.04.2025 | 07.01.2026 | Not applicable | 14.07.2025 | 25.03.2026 | 10.04.2026 | Nil | No Delay |

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்க நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாளாகிய இன்று இவ்வவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.04.10 18:57:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

**இணைப்பு :-**

**அரசு தரப்பு சாட்சிகள் :-**

அ.சா.1 14.07.2025 மணி (புகார்தாரர்)

அ.சா.2 14.07.2025 குமுதவள்ளி (கேள்விநிலை சாட்சி)

| | | |
|---|---|---|
| அ.சா.3 | 14.07.2025 | சின்னதுரை (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.4 | 20.09.2025 | கார்த்திக் (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி) |
| அ.சா.5 | 12.11.2025 | கிருஷ்ணமூர்த்தி (முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி) |
| அ.சா.6 | 18.02.2026 | கோபாலகிருஷ்ணன் (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | அ.சா.1 | புகார் |
| அ.சா.ஆ.2. | அ.சா.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | அ.சா.4 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.4 | அ.சா.4 | நகைகளின் புகைப்படம் |
| அ.சா.ஆ.5 | அ.சா.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | அ.சா.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | அ.சா.5 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.8 | அ.சா.6 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.9 | அ.சா.6 | படிவம் 91 |

**எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை**

**அரசு தரப்பு சான்று பொருள் :-**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1 | - | தங்க நெக்லஸ்-1 |
| அ.சா.பொ.2 | - | ½ பவுன் காயின் -1 |
| அ.சா.பொ.3 | - | தாலி காசு -2 எண்ணிக்கை |
| அ.சா.பொ.4 | - | தாலி குண்டு - 2 எண்ணிக்கை |
| அ.சா.பொ.5 | - | மூக்குத்தி 3 எண்ணிக்கை |

**குறிப்பு :-**

1. எதிரி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 271(2)-ன் கீழ் தண்டிக்கப்படுகிறார்.
2. தீர்ப்பின் நகல் எதிரிக்கு இலவசமாக வழுங்கப்பட்டது.
3. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

4. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு மற்றும் சிறைச்சாலைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சிறையிலிருந்த காலத்தினை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 468–ன் படி மேற்கண்ட தண்டனைக் காலத்திலிருந்து (Set off) கழித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.04.10 18:56:58 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பூர்
அவர்களுக்கு